# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 129 | 4 Pages | 12.12.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 129 | 4 பக்கங்கள் | 12.12.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## சாதனைப் பெண்: 15 அடி உயர பனிமலையில் மருத்துவப்பணி



டெல்லி, டிச.12

இந்தியபாகிஸ்தான் எல்லைக்கோட்டிற்கு அருகே உள்ளது மிக அதிக உயரமுடைய செங்குத்தான பனிமலைகளை உள்ளடக்கிய சியாச்சின் பனிமலைப்பகுதி.

இந்தியாவிலேயே மிக பெரியதும், உலகின் இரண்டாவது மிக பெரிய பனிமலப்பகுதியான இங்கு இந்திய ராணுவத்தில் சிறப்பான பயிற்சி பெற்ற வீரர்கள் நாட்டை காக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். உலகிலேயே உயரமான போர் பகுதியாகவும் இது கருதப்படுகிறது.

இப்பகுதியில் முதல் பெண் மருத்துவ அதிகாரியாக "சியாச்சின் போராளிகள்" (Siachen Warriors) குழுவை சேர்ந்த கேப்டன் ஃபாத்திமா வாசிம் நியமிக்கப்பட்டார்.

"கடுங்குளிருடன் மிக கடினமான வானிலையில் பணியாற்ற தேவையான தீவிர பயிற்சிகளை சியாச்சின் போர் பயிற்சி பள்ளியில் (Siachen Battle School) கேப்டன் ஃபாத்திமா வாசிம் வெற்றிகரமாக நிறைவு செய்ததையடுத்து 15,200 அடி உயரத்தில் பணிக்காக நியமிக்கப்பட்டார். அவரது மனந்தளராத முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் இது சரியான எடுத்துக்காட்டு" என இந்திய ராணுவத்தின் ஃபைர் அண்ட் ஃப்யூரி கோர் (Fire and Fury Corps) தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளது.

கடல் எல்லைக்கு மேல் 12,000 அடி உயரத்தில் பர்தாபூர் எனும் இடத்தில் உள்ளது சியாச்சின் அடிப்படை முகாம் (Siachen Base Camp). சாதாரண தினங்களில் மைனஸ் 86 டிகிரி சென்டிகிரேடு ( 86 degree centigrade) என குளிர்நிலை நிலவி வரும் இங்கு 300 கிலோமீட்டர் வேகத்தில் பனிப்புயல்கள் தாக்குவது வழக்கமான ஒன்று.

இங்குள்ளசியாச்சின்போர்பள்ளியில்தான்கடுமையானபயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கிறார் கேப்டன் ஃபாத்திமா வாசிம்.

## திபெத்திய ஆன்மிக தலைவர் தலாய் லாமா 13 ஆண்டுகளுக்கு பிறகு சிக்கிம் வருகை



சிக்கிம், டிச.12

திபெத்திய ஆன்மிகத் தலைவர் 14வது தலாய் லாமா, டென்சின் கியாட்சோ, 13 வருட இடைவெளிக்குப் பிறகு மூன்று நாள் பயணமாக இன்று காலை சிக்கிம் வந்தார்.

இவர், மூன்று நாள் பயணத்தில் இமாச்சல பிரதேச மாநிலத்தில் தங்கியிருக்கும் போது "போதிசத்துவர்களின் முப்பத்தி ஏழு நடைமுறைகள்" பற்றிய போதனைகளை வழங்குகிறார்.

கிழக்கு சிக்கிமில் உள்ள லிபிங் ராணுவ ஹெலிபேடில் இன்று காலை 10.30 மணியளவில் தரையிறங்கிய தலாய் லாமாவை அம்மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங் வரவேற்றார்.

அவருக்கு மாநிலத்தின் பல்வேறு மடங்களின் துறவிகள் 'ஷெர்பாங்' எனப்படும்நடனம்மற்றும்பிரார்த்தனையின்பாரம்பரியபுத்தசடங்குடகளுடன் பெரும் வரவேற்பு அளித்தனர்.

இதைதொடர்ந்து, தலாய் லாமாவிடம் ஆசி பெற பல்ஜோர் ஸ்டேடியத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று காங்டாக் எஸ்பி டென்சிங் லோடன் லெப்சா தெரிவித்தார்.

தலாய் லாமா கடந்த 2010ஆம் ஆண்டு சிக்கிம் சென்றிருந்தார். அதன் பிறகு, கடந்த அக்டோபரில் சிக்கிம் செல்ல திட்டமிடப்பட்டது. ஆனால், பெரும் வெள்ளம்காரணமாகதலாய்லாமாவின்சிக்கிம்பயணம்ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சந்திரசேகர ராவை சந்தித்து நலம் விசாரித்தார் சந்திரபாபு நாயுடு

தெலுங்கானா. டிச.12

தெலுங்கானா மாநில முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவ் தனது வீட்டின் குளியலறைக்கு சென்ற போது திடீரென வழுக்கி விழுந்தார். கீழே விழுந்ததில், இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டு உள்ளதாக மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக அவருக்கு இடதுபுற இடுப்பு எலும்பு மாற்றப்பட வேண்டும் என்றும், இது முழுமையாக குணமடைய ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை ஆகும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி, சந்திரசேகர் ராவுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தெலுங்கானா மாநில முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவை, ஆந்திரா மாநில முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

# கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது: முதல்வர்

சென்னை, டிச.12

மாநிலங்களவையில் திமுக எம்.பி., எம்.எம்.அப்துல்லா சுட்டிக்காட்டிய பெரியாரின் மேற்கோளுக்கு பாஜகவினர் எதிர்ப்பு தெரிவித்ததற்கும், பெரியாரின் பெயரும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

மாநிலங்களவையில் எம்.பி., எம்.எம்.அப்துல்லா உரையாற்றும் போது சுட்டிக்காட்டிய தந்தை பெரியாரின் மேற்கோளுக்கு பா.ஜ.க.வினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்; பெரியாரின் பெயரும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திலேயே கருத்துரிமையின் கழுத்து நெரிக்கப்பட்டுள்ளது.

மண்டல் ஆணையப் பரிந்துரையை அமல்படுத்தியபோது தந்தை பெரியார்தான் இதற்குக் காரணம் என்று பிரதமர் வி.பி.சிங் பேசிய நாடாளுமன்றத்தில் தந்தை பெரியார் பெயர் நீக்கப்பட்டுள்ளது அவமானம்.

மக்களின் மனங்களில் நிலைத்து நின்று, வகுப்புவாதிகளை இன்றளவும் அச்சுறுத்தும் தந்தை பெரியாரின் பெயரை எங்கும் எப்போதும் எந்தச் சூழலிலும் பயன்படுத்துவோம். அனைவரும் பயன்படுத்துங்கள். இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

# விஜயகாந்த் தலைமையில் தே.மு.தி.க செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் கட்சித் தலைமை அறிவிப்பு

சென்னை, டிச.12

தே.மு.தி.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் வருகின்ற 14.12.2023 வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில், சென்னை, திருவேற்காட்டில் உள்ள GPN பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதில் தேமுதிக நிறுவனத்தலைவர், பொதுச்செயலாளர் விஜயகாந்த் கலந்து கொள்கிறார். மேலும் கழக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கழகத்தின் ஆக்கப் பணிகள் குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் கலந்து ஆலோசித்து சிறப்புரை ஆற்றவுள்ளார்கள். இக்கூட்டத்தில் தலைமை கழக நிர்வாகிகள், கழக உயர்மட்டக்குழு உறுப்பினர்கள், தேர்தல் பணி குழு செயலாளர்கள், கழக அணி செயலாளர்கள், கழக அணி துணை செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், நகரகழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூராட்சி கழக செயலாளர்கள், மற்றும் புதுச்சேரி, கர்நாடகம், கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா, டெல்லி, அந்தமான் ஆகிய மாநில கழக செயலாளர்களும் இப்பொதுக்குழு கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு ள்ளது.

# திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் விளக்குகள் ஏற்றி பெண்கள் 'திடீர்' போராட்டம் – பரபரப்பு

திருப்பூர், டிச.12

திருப்பூர் அடுத்துள்ள பூமலூர் கோகுல் கார்டன் பகுதியை சேர்ந்த பொது மக்கள் 50க்கும் மேற்பட்டோர் இன்று திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர்.

அப்போது திடீரென தங்கள் பகுதிக்கு மின்விளக்கு வசதி ஏற்படுத்தி தர கோரி தாங்கள் கொண்டு வந்த விளக்குகளை ஏற்றி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பாதுகாப்புக்கு நின்ற போலீசார் அதனை தடுத்து நிறுத்தினர். இதில் பெண்களுக்கும் போலீசாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது.

பின்னர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஒரு கோரிக்கை மனு கொடுத்துள்ளனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:



பூமலூர்ஊரட்சிக்குஉட்பட்ட பூமலூர் கிராமம் கோகுல் கார்டன்பகுதியில்250குடும்பங்கள் வசித்து வருகிறோம். கடந்த 3 ஆண்டுகளாக கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி மன்றத்தலைவரிடம் அடிப்படை வசதிகளானகுடிநீர்,தெருமின்விளக்கு, சாக்கடை வசதி செய்து தரக் கோரி மனு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே பொது மக்களின் இந்த கோரிக்கையை ஏற்று எங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர்கள் கூறியிருந்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சிமொழிச் சட்ட வார விழா

திருப்பூர், டிச.12

2019–2020ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை அறிவிப்பில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளை நினைவுகூரும் வகையில் நிகழாண்டில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒரு வார காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படவேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆணையின் அடிப்படையில் திருப்பூர் மாவட்டத்தில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் 18.12.2023 முதல் 27.12.2023 வரையிலான ஒரு வார காலத்திற்கு கொண்டாடப்படவுள்ளது. ஆட்சிமொழிச் சட்ட வாரம் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணி முதல் நடைபெறும்.

இந்த ஆட்சிமொழிச் சட்ட வார விழா தொடர்பான நிகழ்வின் முதல் நாள் 18.12.2023 அன்று காலை 10.00 மணியளவில் அரசுப் பணியாளர்கள், தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்கள், பள்ளி–கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் ஆட்சிமொழி விழிப்புணர்வுப் பேரணி திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியிலிருந்து தொடங்கி வீரபாண்டி பிரிவு வரை சென்று மீண்டும் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு வந்தடையவுள்ளது. இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது நாள் நிகழ்வாக 19.12.2023 காலை 10 மணி முதல் 12.30 மணி வரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகக் கூட்ட அரங்கில் அரசுப் பணியாளர்களுக்கு கணினித் தமிழ் ஒருங்குறி பயன்பாடு குறித்து பயிற்சியும், மூன்றாவது நாள்நிகழ்வாக20.12.2023 காலை 10 மணி முதல் 12.30 மணி வரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வணிக நிறுவன உரிமையாளர்கள், வணிக நிறுவன அமைப்புகளுடன் இணைந்து வணிக நிறுவனங்களின் தமிழில் பெயர்ப்பலகை அமைத்திட வலியுறுத்தி விளக்கக் கூட்டமும்,

நான்காவது மற்றும் ஐந்தாம் நாள் நிகழ்வாக 21.12.2023, 22.12.2023 ஆகிய இரண்டு நாள்கள் காலை 10 மணி முதல் 12.30 மணி வரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகக் கூட்ட அரங்கில் அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிச் சட்டம் / வரலாறு, தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதுதல் முதலிய தலைப்புகளில் பயிற்சியும், ஆறாம் நாள் நிகழ்வாக 23.12.2023 அன்று ஆட்சிமொழிச் சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்கும் ஆட்சிமொழிப் பட்டிமன்றமும், இறுதி நாள் நிகழ்வாக 27.12.2023 அன்று திருப்பூர் மக்கள் மாமன்றம் அறக்கட்டளை (டைமண்ட் திரையரங்கம் அருகில்) அரங்கில் தமிழ் அமைப்புகள், நிருவாகிகளுடன் இணைந்து ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டமும் நடைபெறவுள்ளன என மாவட்ட ஆட்சியர் தா. கிறிஸ்துராஜ், தெரிவித்துள்ளார்கள்.




கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலககூட்டரங்கில்நடைபெற்றமக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# காலியாகவுள்ள பணியிடங்களுக்கு இன சுழற்சி அடிப்படையில் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

திருப்பூர், டிச.12

திருப்பூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகு ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றிய தலைப்பில் ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர், இரவுக்காவலர், பதிவறை எழுத்தர் மற்றும் ஈப்பு ஓட்டுநர் பணியிடங்களுக்கு இன சுழற்சி அடிப்படையில் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படவுள்ளதால் தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்;கப்படுகின்றன.

இக்காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை, விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பபடிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் இ www.tiruppur.tn.nic.in ணையதளத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் 26.12.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் காலிப் பணியிடங்கள் உள்ள தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாக வரவேற்;கப்படுகின்றன. குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். தகுதியில்லாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

இவ்வாறு ஆணையாளர், தாராபுரம், காங்கேயம், குண்டடம், மடத்துக்குளம், மூலனூர், பல்லடம், பொங்கலூர், திருப்பூர், உடுமலைப் பேட்டை, ஊத்துக்குளி மற்றும் வெள்ளகோவில் தெரிவித்துள்ளார்கள்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் நிறுவன முதன்மை தணிக்கக்குழு ஆய்வு அலுவலர் கார்த்திகேயன் முன்னிலையில் கலெக்டர் அலுவலகத்தில் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் நிறுவன முதன்மை தணிக்கைகுழுஆய்வின்அடிப்படையில்திருப்பூர்மாவட்டத்தில்3பள்ளிகளில்உள்ளசத்துணவுகூடங்களுக்கு ஐ.எஸ்.ஓ. தரசான்றிதழ்கலை வழங்கினார்.

# டிரைவர் தாக்கப்பட்டதை கண்டித்து அரசு பஸ்களை நிறுத்தி டிரைவர் கண்டக்டர்கள் போராட்டம்

தாராபுரம்: டிச.12

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பஸ் நிலையத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இன்று காலை 8.30 மணி அளவில் பஸ் நிலையம் பரபரப்பாக காணப்பட்டது.

இந்தநிலையில் அங்குள்ள டீக்கடையில் மாஸ்டராக பணியாற்றி வரும் தாராபுரம்தெற்குதெருவை சேர்ந்த தாஸ் (வயது 35) என்பவர் கடைக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது டீக்கடை முன்பு நிறுத்தப்பட்டிருந்த அரசு பஸ்சின் டிரைவர் பாபு சாப்பிட்டு விட்டு பஸ்சின் ஜன்னல் வழியாக கை கழுவிய தண்ணீரை ஊற்றியுள்ளார். அந்த தண்ணீர் தாஸ் மீது பட்டதாக தெரிகிறது.

இதனால் ஆத்திரம் அடைந்த தாஸ், தண்ணீரை பார்த்து ஊற்ற முடியாதா? என்று டிரைவர் பாபுவிடம் கேட்டுள்ளார். மேலும் டீ கடையில் உள்ள ஜக்கில் இருந்து தண்ணீரைகொண்டுவந்து பாபு மீது ஊற்றியுள்ளார். இதனால் 2 பேருக்கும் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. இருவரும் மாறி மாறி அடிக்க தொடங்கினர்.

இதையறிந்து அரசு பஸ் டிரைவர்கள் மற்றும் கண்டக்டர்கள் 10க்கும் மேற்பட்டோர் சம்பவ இடத்திற்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் மோதலில் காயமடைந்த தாஸ் மற்றும் பாபு ஆகிய 2 பேரையும் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இந்நிலையில் அரசு பஸ் டிரைவர்கள், கண்டக்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பஸ்சை எடுக்காமல் அப்படியே நிறுத்தினர். சுமார் அரை மணி நேரம் பஸ்சை எடுக்காமல் போராட்டம் நடத்தியதால் பயணிகள் கடும் சிரமப்பட்டனர். வெளியூர் மற்றும் வேலைக்கு செல்லக்கூடிய பொது மக்கள் கடும் அவதியடைந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்ததாராபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிகண்டன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்பிறகு டிரைவர்கள் பஸ்சை இயக்கினர். இந்த சம்பவம் குறித்து தாராபுரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தாராபுரம் பஸ் நிலையத்தில் நடந்த இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு நிலவியது.

# கோரக்கர் சித்தர் கோவிலில் பழங்கால தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு

கன்னியாகுமரி, டிச, 12

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் தேரூர் குறண்டியில் கோரக்கர் சித்தர்கோவில் உள்ளது. இந்த கோவிலில் மாதந்தோறும் பிரதோஷ விழா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து வருகிறது. இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் சென்று கோரக்கர் சித்தரை வழிபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் இந்த கோவிலின் தெற்கு பகுதியில் பழங்கால தமிழ் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது, இதனைகன்னியா குமரி அருகே உள்ள கொட்டாரத்தைச் சேர்ந்த எழுத்தாளர் சுந்தர்என்பவர் இந்த கோவிலுக்கு சென்று இருந்தபோது இந்தகல்வெட்டை கண்டுபிடித்து உள்ளார்.

மேலும் இந்த கல்வெட்டை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் வந்து கள ஆய்வு செய்து, எந்த நூற்றாண்டைச் சேர்ந்த கல் வெட்டு என்று அதிகாரப் பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

கன்னியாகுமரிமாவட்ட தொல்லியல்துறை அதிகாரிகள் முன் வர வேண்டும் என்றும் அழிவின் விளிம்பில் இருக்கும் குறண்டி கோரக்கர் சித்தர் கோவிலை புனரமைக்க இது வழிவகுக்கும் என்றும் பக்தர்கள் கோவிலின் தொன்மையை தெரிய வாய்ப்பாக இருக்கும் என்றும் தமிழ் எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கையாக முன் வைத்து உள்ளனர்.

# மேலூரில் விவசாயிகள் உண்ணாவிரதம்: அதிமுக. உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் ஆதரவு

மேலூர், டிச.12

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் பெரியார் கால்வாயில் இருந்து பாசனத்திற்காக ஒவ்வொருஆண்டும்ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இந்த பெரியாறு கால்வாய் மூலம் மேலூர் பகுதியில் 85,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. ஆனால் இந்தஆண்டுகுடிநீருக்காக 10 நாட்கள் மட்டும் தண்ணீர் திறக்கப்பட்டது.



ஆனால் தங்கள் பகுதிக்கு விவசாயத்திற்கு தண்ணீர்திறக்க வேண்டும் என்று கடந்த ஒரு மாத காலமாக மேலூர் பகுதி விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். முதலில் கடையடைப்பு, ஊர்வலம், பொதுப்பணித்துறை அலுவலகம் முற்றுகை ஆகிய போராட்டங்கள் இது வரை நடத்தி முடித்து விட்டனர்.

ஆனால் இவர்களது கோரிக்கையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும்மாவட்டநிர்வாகம் ஏற்கவில்லை. இதனால் இன்று மேலூர் பஸ் நிலையம் அருகே ஒருபோக பாசன விவசாய சங்க தலைவர் முருகன் தலைமையில் மேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த போராட்டத்திற்கு அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் மேலூர்அனைத்து வர்த்தக சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டுள்ளனர்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில், தற்போது முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டிவிட்டது. மேலும் அதன் எதிரொலியாக இடுக்கி மாவட்டத்திற்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த சூழ்நிலையாவது மேலூர் பகுதிக்கு பெரியார் கால்வாயில் இருந்து தாமதிக்காமல் தண்ணீர்திறக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த போராட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டுள்ளனர்.

# சாலையில் விழுந்த ராட்சத பாறை: காரில் சென்ற 5 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்

அருவங்காடு, டிச.12

குன்னூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே பரவலாக மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் பல்வேறு பகுதிகளில் மண் சரிவு ஏற்பட்டு அவ்வப்போது போக்குவரத்து பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இன்று அதிகாலை கே.என்.ஆர் பகுதியில் மரம் சரிந்து சாலையில் விழுந்ததால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து குன்னூர் வனசரகர் ரவீந்திரன் தலைமையிலான குழு அந்த பகுதிக்கு சென்று சென்று சாலையில் விழுந்த மரத்தை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

பர்லியார் பகுதியில் விடிய, விடிய பெய்த மழை காரணமாக அப்பகுதியில் உள்ள 2 வீடுகள் மீது மண்சரிந்து விழுந்ததில் வீடுகள் சேதம் அடைந்தன.

இது மட்டுமல்லாமல் தொடர் மழை காரணமாக மலைப்பாதையில் மண் சரிவு ஏற்படுவதுடன் மரங்களும் முறிந்து விழுகிறது.

மேலும் அவ்வப்போது பாறைகளும் உருண்டு வருவதால் வாகன ஓட்டிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குன்னூர்மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் 13வதுகொண்டை ஊசி வளைவு அருகே திடீரென மலைச்சரிவிலிருந்து பாறை ஒன்று உருண்டு வந்து சாலையில் விழுந்தது. அப்போது அந்த வழியாக கார் ஒன்று வந்து கொண்டிருந்தது. கார் வேகமாக சென்று விட்டதால், காரில் இருந்த 5 பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். குன்னூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆனந்தராஜ் மற்றும் போலீசார் விரைந்து சென்று கடப்பாரையைக் கொண்டு சுமார் 2 மணி நேர போராட்டத்திற்கு பின் பாறையை நடுரோட்டில் இருந்து அகற்றினர்.

இதனிடையே குன்னூர் கோத்தகிரி சாலையில் எடப்பள்ளி அருகே ராட்சத சாம்பிராணி மரம் சாலையின் குறுக்கே விழுந்ததால் போக்குவரத்து பாதித்தது.

இதுகுறித்து தகவல் அறிந்தவுடன் குன்னூர் தீயணைப்பு நிலைய அலுவலர் குமார் தலைமையிலான குழுவினர் விரைந்து சென்று ஒரு மணி நேரம் போராட்டத்திற்கு பின்னர் மரத்தை வெட்டி அகற்றினர்.

# சாலையில் விழுந்த ராட்சத பாறை: காரில் சென்ற 5 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்

பட்டுக்கோட்டை, டிச.12

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே கழுகுப்புலிக்காடு கிராமத்தை சேர்ந்தவர் ஜேம்ஸ் (வயது 38). இவரது மனைவி பாத்திமா பானு (35). இந்த தம்பதிக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஜேம்ஸ்சுக்கும், பாத்திமா பானுவுக்கும் இடையே குடும்ப தகராறு ஏற்பட்டது. இது குறித்து பாத்திமா பானு பட்டுக்கோட்டை தாலுகா போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து ஜேம்சை கைது செய்து திருச்சி சிறையில் அடைத்தனர். திருச்சி சிறையில்இருந்தஜேம்சை ஜாமீனில் எடுக்க அவருடைய மனைவி பாத்திமா பானு எந்த முயற்சி எடுக்கவில்லை.

இந்நிலையில் ஜேம்ஸ்சின் தாயார் ஆரோக்கிய மேரி ( 57) தன்னுடைய மகனை ஜாமீனில் எடுக்க முயற்சி செய்து உள்ளார். இதனை கேள்விப்பட்ட பாத்திமா பானு மாமியாரிடம் தன்னுடைய கணவரை ஜாமீனில் எடுக்க வேண்டாம். அவ்வாறு எடுத்தால் அவர் வெளியில் வந்த பிறகு என்னை கொலை செய்து விடுவார் என்று கூறிதடுத்துள்ளார்.

ஆனால் அதை கேட்காத ஆரோக்கிய மேரி தனது மகனை ஜாமீனில் எடுக்க முயற்சி செய்ததாக கூறப்படுகிறது.



இந்நிலையில் நேற்று இரவு திடீரென ஆரோக்கிய மேரி மற்றும் பாத்திமாபானுஇடையேஜாமீன் எடுப்பது சம்பந்தமாக மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கோபம் அடைந்த பாத்திமா பானு தன்னுடைய மாமியார் ஆரோக்கியமேரியை அரிவாளால் சரமாரியாக வெட்டினார். இதில் அவர் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பலியானார்.

இது குறித்து தகவல் அறிந்ததும் பட்டுக்கோட்டை தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆரோக்கிய மேரி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பட்டுக்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்கு பதிவு செய்து பாத்திமாபானுவை கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. இச்சம்பவம் பட்டுக்கோட்டை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


# பண்ணைப்புரம் மலையடிவாரத்தில் மக்னா யானை தாக்கியதில் காவலாளி படுகாயம்

உத்தமபாளையம், டிச.12

தேனி மாவட்டம் பண்ணைப்புரம் வடக்கு தெருவை சேர்ந்தவர் ராமு (வயது 65), இவர் கேரளாவை சேர்ந்த ரவீந்திரநாத் என்பவரது தோட்டத்தில் இரவு காவலாளியாக வேலை பார்த்து வருகிறார். தினமும் தோட்ட வேலையை பார்த்துவிட்டு, வீட்டுக்கு செல்வார். அப்போது தேவையான உணவு பொருட்களை வாங்கி விட்டு, மீண்டும் இரவு தோட்டத்திற்கு செல்வது வழக்கம். அதன்படி நேற்று இரவு ராமு தோட்டத்திற்கு செல்வதற்காக, பண்ணைப்புரம் சங்கப் பன்குளம் பகுதியில் நடந்து சென்றார்.

அப்போது அந்த பகுதியில் இருந்து வந்த ஒற்றை மக்னா யானை ராமுவை பலமாக தாக்கியது. இதில் அவர் பக்கத்தில் உள்ள முள்வேலியில் சிக்கி பலத்த காயமடைந்தார். வேலிக்குள்விழுந்து கிடந்ததால், மக்னா யானை அப்படியே விட்டுவிட்டு சென்றது. உயிர் தப்பிய ராமுவை இன்று அக்கம் பக்கத்தினர்மீட்டு உத்தமபாளையம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.





தற்போது சபரிமலை சீசன் தொடங்கியுள்ளதால் அங்குள்ள வனப்பகுதியில் தொடர்ந்து அதிர்வேட்டு வெடிக்கப்படுகிறது. இதனால் அங்குள்ள யானைகள் இடம் பெயர்ந்து தேனி விளை நிலங்களுக்குள் புகுவது தொடர் கதையாகி வருகிறது. ஏற்கனவே இப்பகுதியில் மக்னா யானை தாக்கி பலர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது மீண்டும் மக்னா யானை தொழிலாளியை தாக்கியுள்ள சம்பவம் விவசாயிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே வனப்பகுதியை ஒட்டியுள்ள விளை நிலங்களில் யானைகள் புகுவதை தடுக்க வனத்துறை தீவிரநடவடிக்கைஎடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிராமத்திற்குள் புகுந்த 60 காட்டுயானைகள்

ஒசூர்:, டிச.12

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் பதுங்கியிருந்த 60 காட்டுயானைகளை வனத்துறையினர் ஊடே துர்க்கம் வனப்பகுதிக்கு விரட்டியிருந்த நிலையில், அவை மீண்டும் நேற்று முன்தினம் இரவு வனப்பகுதிக்கு திரும்பின. இந்த நிலையில், சானமாவு காட்டில் 40 யானைகள் மற்றும் 20 யானைகள் என 2 குழுக்களாக 60 யானைகள் பிரிந்துள்ளன. மேலும் இவை தனித்தனியாக அருகில் உள்ள கிராமங்களுக்குள் புகுந்து நடமாடும் அபாயம் உள்ளது. எனவே, சானமாவு, போடூர், ஆழியாளம், ராமாபுரம், பீர்ஜேப்பள்ளி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு வனப்பகுதிக்கு அழைத்து செல்வதை தவிர்க்க வேண்டும், யானைகளை கோபப்படுத்தும் விதமாகவோ, பொதுமக்கள் செல்பி எடுக்க முயற்சிக்க கூடாது என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் அந்த யானைகளின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில், ஆழியாளம் கிராமத்திற்குள் 40 யானைகள் புகுந்து அப்பகுதியில், 20க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை சேதப்படுத்தியதால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகைபெற தமிழ் அறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு: கலெக்டர் தகவல்

திருப்பூர், டிச.12

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகச் சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகிறது.

முதுமைக்காலத்திலும் பொருள் வறுமை, தமிழ்த் தொண்டர் பெருமக்களைத் தாக்காவண்ணம் திங்கள்தோறும் ரூ.3500/ம், மருத்துவப் படி ரூ.500/ம் என நான்காயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பெறுகிறது. தமிழுக்காகத் தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித் தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ஈடுபடும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

தகைமைமேல் தகைமையாக, அகவை முதிர்ந்த தமிழ்ச்சான்றோர் பெருமக்களுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது. தமிழ் காத்த தகைமைக்காக உதவித் தொகை பெற்ற தமிழறிஞர் பெருமக்களின் மறைவுக்குப் பின்னர், அவரின் மரபுரிமையருக்கு, அவர்தம் வாழ்நாள் முழுவதும் ரூ.2500/ மற்றும் மருத்துவப் படி ரூ.500/ என அத்திருத்தொண்டு தொடர்கிறது.

தமிழாய்ந்த தமிழ்மகனின் தமிழரசு தமிழ்த் தொண்டர்களைக் காக்கும் இப்பணியில் இதுகாறும் 1234 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர். அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மறைவிற்குப் பிறகு அவர்களின் மரபுரிமையர்கள் 70 பேருக்கு தற்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் இத்திட்டத்தில் பயன் பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 2023 2024ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: '01.01.2023 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்', 'ஆண்டு வருவாய் ரூ.72,000/க்குள் இருக்க வேண்டும்'. (வட்டாட்சியர் அலுவலகத்தில் இணையவழியில் பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப்படவேண்டும்), 'தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான விவரக் குறிப்பு'. 'தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான பரிந்துரைச் சான்று இரண்டு தமிழறிஞர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்'.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும்திட்டத்தின் விண்ணப்பப்படிவத்தினை மண்டில / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை/ உதவி இயக்குநர் அலுவலகத்திலேயே நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.அல்லதுதமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.tn.gov.in) கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு முன்னர்க் கூறியதுபோல், திங்கள்தோறும் உதவித்தொகையாக ரூ.3500/ம், மருத்துவப்படி ரூ.500/ம் அவருடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அறைஎண்.608இல்இயங்கிவரும் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்தில் 31.12.2023க்குள் அளிக்கப்பட வேண்டுமெனவும், நேரடியாக தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அளிக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# திருத்தணி மலைப்பாதையில் மீண்டும் மண் சரிவு போக்குவரத்து நிறுத்தம்

திருவள்ளூர், டிச.12

மிச்சாங் புயலால் திருவள்ளூர் மாவட்டத்தில் கனமழை கொட்டித்தீர்த்தது. வரலாறு காணாத மழையால் மாவட்டம் முழுவதும் பெரும்பாலான இடங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கின.

கடந்த 4ந்தேதி பலத்த மழை கொட்டியபோது திருத்தணி முருகன் கோவிலுக்கு செல்லும் மலைப் பாதையில் திடீரென மண் சரிவு ஏற்பட்டது.

பின்னர் அதனை தற்காலிகமாக மணல் மூட்டைகளைக் கொண்டு சரி செய்து போக்குவரத்துக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் மண்சரிவு ஏற்பட்டு உள்ள அந்த




இடத்தில் மீண்டும் அதிக அளவு மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால்மலைப் பாதைவழியாகபோக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளன. மலைப்பாதையை முற்றிலும் ஆய்வு செய்து மண்சரிவை சரி செய்த பின்னரே போக்குவரத்துக்கு அனுமதிக்க அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

இதைத்தொடர்ந்து மலைக் கோவிலுக்கு செல்லும் பஸ், லாரி, இருசக்கர வாகனம் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் நுழைவுவாயில் பகுதியிலேயே தடுப்புகள் அமைத்து நிறுத்தப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பகுதியில் இருந்து பஸ், கார், வேன், ஆட்டோ, இருசக்கர வாகனத்தில் வந்த பக்தர்கள் வாகனத்தில் மலை கோவிலுக்கு செல்ல முடியவில்லை. அவர்கள் கோவிலின் அடிவாரத்தில் இருந்து படிக்கட்டு வழியாக நடந்து கோவிலுக்கு சென்றனர். இதன்காரணமாக முதியோர் மற்றும் குழந்தைகள் அவதி அடைந்தனர். மலைப் பாதை சீரமைக்கப்பட்ட பின்னர்போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்

# பரண் மீது 2 மகன்களை தூக்கி வைத்துவிட்டு கியாஸ் சிலிண்டர் மீது ஏறி நின்று 12 மணிநேரம் உயிருக்கு போராடிய தாய்

சென்னை, டிச.12

சென்னையை மிதக்க விட்ட வெள்ளத்துக்குள் சிக்கி மீண்டவர்களும், மீட்கப்பட்டவர்களும் திகில் நிறைந்த தங்கள் அனுபவங்களை சொல்வதை கேட்கும் போது மிகப்பெரிய வியப்பை ஏற்படுத்துகிறது.

அவ்வாறு மீட்கப்பட்டவர்களில் 30 வயதான உமா மகேஸ்வரியும், அவரது 2 மகன்களும் அடங்குவார்கள். இவர் தண்ணீருக்குள் உயிருக்காக போராடியது மிகவும் திகிலானது. அவர் கூறும் போது:

எங்கள் சொந்த ஊர் விழுப்புரம். மேற்கு தாம்பரத்தில் குடும்பத்துடன் வாடகை வீட்டில் வசிக்கிறோம். கூலி வேலை பார்க்கிறோம். கடந்த 3ந்தேதி மாலையில் தொடங்கிய மழை இரவிலும் ஓயாமல் பெய்து கொண்டிருந்தது.

காலையில் எழுந்ததும் கதவை திறந்து பார்த்தால் வெள்ளக்காடாக காட்சி.

ஊரெல்லாம் வெள்ளக் காடாக காட்சி அளித்திருக்கிறது. இருப்பினும் வெளியே புறப்பட்ட கணவரிடம், இன்றைக்கு வெளியே போகாதீங்க... மழை வெள்ளம் ஒரு மாதிரி மிரட்டுகிறது. வீட்டுக்குள்ளும் வெள்ளம்



வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

ஏய்... இதுக்கு போய் பயப்படலாமா? வீட்டுக்குள் எல்லாம் தண்ணீர் வரப்போவதில்லை. தைரியமாக இருங்கள் என்று கூறி விட்டு அவர் வெளியே கிளம்பி சென்று விட்டார்.

நேரம் செல்ல செல்ல உமாமகேஸ்வரி நினைத்தது போலவே நடந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுக்குள் வெள்ளம் புகுந்தது. வெள்ளம் முட்டளவை தாண்டியதும் அவரது மகன்கள் இரண்டு பேரும் 'அம்மா... பயமா இருக்கும்மா...' என்று உமாமகேஸ்வரியை கட்டிப்பிடித்து அழுது இருக்கிறார்கள்.

நிலைமையை நினைத்து கலங்கிய உமாமகேஸ்வரிக்கும் பயம் சூழ்ந்தது. வெளியே எங்கு பார்த்தாலும் கடல் போல் வெள்ளம் நின்றது. சிலர் படகுகளில் சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டதை பார்த்ததும் 'எங்களை காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்..' என்று அபய குரல் எழுப்பி இருக்கிறார்.

ஆனால் உமாமகேஸ்வரியின் குரல் யாருக்கும் கேட்கவில்லை. அவர்கள் தண்ணீரில் தத்தளித்தது யாருக்கும் தெரியவும் இல்லை.

வெள்ளம் அதிகரித்து மகன்களை மூழ்கடிக்கும் அளவுக்கு வந்து விட்டது. நிலைமை விபரீதமாகி விடும் என நினைத்த உமா மகேஸ்ரி நாம் இறந்தாலும் பரவாயில்லை. நம் பிள்ளைகள் பிழைத்து கொள்ளட்டும் என நினைத்து இருவரையும் வீட்டுக்குள் இருந்த பரண் (லாப்ட்) மீது தூக்கி உட்கார வைத்துள்ளார்.

மகன்கள் 'அம்மா நீயும் வந்துரும்மா' என்று கதறி இருக்கிறார்கள். "நான் ஏற முடியாதுடா செல்லம். நீங்கள் பயப்படாமல் பத்திரமாக இருங்கள்" என்று அவர்களை தைரியப்படுத்தி இருக்கிறார்.

காலை 10 மணியளவில் கதவு மட்டத்துக்கும் மேலே வெள்ளம் வந்து கொண்டிருந்தது. அதை பார்த்ததும் எப்படியும் தப்பிக்க முடியாது என்று கருதி இருக்கிறார். ஒரே அறை உள்ள வீடு அது. வேறு எங்கும் செல்லவும் முடியாது.

கடைசி கட்ட முயற்சியாக கியாஸ் சிலிண்டரை எடுத்து போட்டு அதன் மீது ஏறி நின்றுள்ளார். இப்படியே சுமார் 12 மணி நேரம் நின்றுள்ளார்.

இரவில் அந்த வழியாக மீட்பு பணிக்கு சென்ற பேரிடர் மீட்பு குழுவினர் அவர்களை பார்த்துள்ளார்கள்.

பயந்து நடுங்கிய அவர்களை பார்த்ததும் 'இனி பயப்படாதீர்கள் நாங்கள் காப்பாற்றி விடுவோம்' என்று தைரியம் அளித்து ஒவ்வொருவராக மீட்டு வெளியே கொண்டு வந்தார்கள்.

உயிர் பிழைத்த 3 பேரும் இன்னும் கொஞ்சம் நேரம் யாரும் வந்திருக்காவிட்டால் செத்திருப்போம் என்று நடுங்கியபடியே கூறினார்கள்.

# பாபநாசம் அணை நீர்மட்டம் 122 அடியை எட்டியது விவசாய பணிகள் தீவிரம்


நெல்லை, டிச.12

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் வடகிழக்கு பருவ மழை பரவலாக பெய்து வருகிறது. நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கன மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் தொடங்கி நேற்று காலை வரையிலும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது. இதன் காரணமாக சாலைகளில் மழைநீர் தேங்கியது. களக்காடு, மூலக்கரைப்பட்டி உள்ளிட்ட இடங்களில் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது.

ராதாபுரம் சுற்று வட்டாரத்தில் நேற்று பகல் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து மழை பெய்தது. அங்கு அதிகபட்சமாக 13 மில்லிமீட்டர் மழை பெய்தது. அதே நேரத்தில் மாவட்டம் முழுவதும் இன்று அதிகாலை முதலே குளிர் நிலவியது. இதனால் வாகன ஓட்டிகளும், காலையில் பணிக்கு செல்வோரும் பாதிக்கப்பட்டனர்.

அணை பகுதிகளை பொறுத்தவரை பாபநாசம் மற்றும் சேர்வலாறு அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை



பெய்தது. 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்பிடிப்பு பகுதியில்10மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. அணைக்கு வினாடிக்கு 762 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

அணையின் நீர்மட்டம் இன்று 1 அடி உயர்ந்து 121.60 அடியை எட்டியுள்ளது. தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால், இன்று மாலைக்குள் 122 அடியை கடந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 134.81 அடியை எட்டியுள்ளது.அங்கு4மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தாமிரபரணி ஆற்றில் நேற்று 7 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்த நிலையில், மழை குறைவால் இன்று நீர்வரத்து குறைந்தது.

தென்காசி மாவட்டத்தில் தென்காசி மற்றும் செங்கோட்டை ஆகிய இடங்களில் பரவலாக மழை பெய்தது. இன்றும் காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. ஆய்குடி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் 16 மில்லி மீட்டர் மழை கொட்டியது. அணைகளை பொறுத்தவரை கடனா நதி, கருப்பாநதி, ராமநதி, குண்டாறு ஆகிய அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. கருப்பாநதியில் 15 மில்லிமீட்டர் மழை பதிவாகியது.

மாவட்டத்தில் அடவி நயினார் அணையை தவிர மற்ற அணைகள் அனைத்தும் நிரம்பி வழிவதால் விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. பாவூர்சத்திரம், ஆய்குடி, செங்கோட்டை, அச்சன்புதூர், ஆலங்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயநிலங்களில்நெல் நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் அந்த பகுதிகளில் பச்சை பசேலென காட்சியளிக்கின்றன.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் மழையால் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலியருவி ஆகியவற்றில் தண்ணீர் அதிக அளவில் கொட்டி வருகிறது. அதில் அய்யப்ப பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான்குளம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் நேற்று கன மழை பெய்தது. அங்கு அதிகபட்சமாக 57.4 மில்லிமீட்டர் மழை பெய்தது. திருச்செந்தூர், காயல்பட்டினம், குலசேகரன்பட்டினம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் விட்டு விட்டு மழை பெய்தது. திருச்செந்தூரில் 52 மில்லிமீட்டரும், குலசேகரன்பட்டினத்தில் 47 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. வைப்பாறு, சூரன்குடி, எட்டயபுரத்தில் சாரல் மழை பெய்தது.

# நெல்லை அருகே மோட்டார் சைக்கிள் விபத்தில் அரசு பள்ளி ஆசிரியர் பலி

நெல்லை, டிச.12

சங்கரன்கோவில் அருகே உள்ள ஜெருசலேம் தர்மா நகர் தெற்கு தெருவை சேர்ந்தவர் அந்தோணி. இவரது மகன் ஜான் பால் (வயது 37). இவரது மனைவி கனிஷ்கா.

ஜான்பால் நெல்லை மாவட்டம் மணிமுத்தாறில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார்.

கடந்த 4ந்தேதி நெல்லையில் இருந்து இவர், மோட்டார் சைக்கிளில் மணிமுத்தாறுக்கு சென்று கொண்டிருந்தார். முன்னீர் பள்ளம் அருகே உள்ள பிராஞ்சேரி பகுதியில் சென்று கொண்டிருந்த போதுசாலையின்குறுக்கே ஒருவர் வந்ததால் திடீரென ஜான்பால் பிரேக் பிடித்துள்ளார்.

இதில் மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறியதில் ஜான் பால் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். உடனே அவரை அந்த வழியாக சென்றவர்கள் மீட்டு சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் அங்கிருந்து புதிய பஸ் நிலையம் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி இன்று காலை ஜான்பால் பரிதாபமாக இறந்தார். இச்சம்பவம் குறித்து முன்னீர்பள்ளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே ஜான் பால் உடல் உறுப்புகளை தானம் செய்ய அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர். இதைத் தொடர்ந்து அவரது உடல் நெல்லை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.


அங்கிருந்து அவரது உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு பொருத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை டீன் ரேவதி தலைமையில் மருத்துவமனை டாக்டர்கள் செய்து வருகின்றனர்.

# எண்ணூரில் மழை வெள்ளத்தின் போது கடலில் கலந்த எண்ணெய் கழிவு: ஹெலிகாப்டரில் ரசாயன பவுடர் தெளிப்பு

திருவொற்றியூர், டிச.12

மிச்சாங் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் அனைத்து இடங்களும் மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டன. கனமழையின் காரணமாக புழல் ஏரியில் இருந்து திறக்கப்பட்ட உபரி நீர் எண்ணூர் முகத்துவாரத்தில் கலந்தது. அப்போது மழைநீருடன் கச்சா எண்ணை கழிவுகளும் கலந்ததால் முகத்துவார பகுதியில் மீன்கள் செத்து மிதந்தன. மேலும் எண்ணை படலங்கள் அருகில் உள்ள குடியிருப்புகளிலும் படர்ந்து இருந்தது. இதே போல் எண்ணூர் முகத்துவார பகுதியிலும் அதிக அளவு எண்ணைகழிவுகள் கடலில் கலந்து படர்ந்து உள்ளன. இதனால் கடல் நீர் மாசுபடுவதோடு சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டது. இதையடுத்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் இது தொடர்பாக விசா



ரணை நடைபெற்று வருவதோடு கச்சா எண்ணை படலம் தொடர்பாக உண்மை நிலையை கண்டறிய 9 பேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொசஸ் தலை ஆற்று முகத்துவாரத்தில் இருந்து காசிமேடு மீன்பிடி துறை முகம் வரை கடலில் சுமார் 20 கிலோ மீட்டர் வரை எண்ணை கசிவு படர்ந்துள்ளது.

இந்த பகுதி மீன்பிடி தொழில் அதிக அளவில் நடைபெறும் என்பதால் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து கடலில் பரவி உள்ள எண்ணை கழிவுகள் மேலும் பரவுவதை தடுக்க கடலோர காவல் படை ஹெலிகாப்டர் மூலம் ஆயில் ஸ்லிட் டிசால் வன்ட் (ஒ.எஸ்.டி) என்னும் எண்ணெய் கரைப்பானை கடலில் தெளித்தனர்.

இதுதொடர்பாக கடலோர காவல்படை சார்பில் வெளியிடப்பட்டு உள்ள செய்திக்குறிப்பில், மிச்சாங் புயலுக்கு பின் ஏற்பட்ட வெள்ளத்தில் எண்ணெய் கசிவு கலந்தது குறித்து தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் ஆய்வு செய்து வருகிறது. கொசஸ்தலை ஆற்று முகத்துவாரத்தில் இருந்து காசிமேடு துறை முகம் வரை சுமார் 20 கி.மீட்டர்வரை எண்ணெய் கசிவு படர்ந்து உள்ளது. இந்த கழிவுகள் மேலும் பரவுவதை தடுக்கும் வகையில் கடலோர காவல்படை கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர் மூலம் ஆயில் ஸ்லிட் டிசால்வன்ட் எனும் எண்ணெய் கரைப்பான் நேற்று தெளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே இன்று பசுமை தீர்ப்பாயம் அறிவித்துள்ள 9 பேர் கொண்ட குழுவினர் எண்ணூரில் எண்ணை படர்ந்துள்ள பகுதிகளை ஆய்வு செய்ய உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆழ்வார்பேட்டை டி.டி.கே.சாலையில் திடீர் பள்ளம்

சென்னை,டிச.12

சென்னை ஆழ்வார் பேட்டை டி.டி.கே.சாலை பிரபலமானது. அந்த பகுதியில் வி.ஐ.பி.க்கள் வசிக்கிறார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது இல்லத்தில் இருந்து இந்த சாலை வழியாகத்தான் தலைமைச் செயலகத்துக்கு சென்று வருவார்.

இந்த நிலையில் நேற்று காலை 9 மணியளவில் டி.டி.கே.சாலை தபால் நிலையம் அருகில் திடீரென பள்ளம் ஏற்பட்டது. 4 அடி ஆழத்தில் பள்ளம் ஏற்பட்டதால் அந்த பகுதியில் பரபரப்பு உண்டானது. உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.




அங்கு விரைந்த போலீசார் உடனடியாக பள்ளம் விழுந்த பகுதியை சுற்றி தடுப்பு வேலி அமைத்து போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தினர். அந்த வழியில் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. ஆட்டோ, இருசக்கர வாகனங்கள் செல்ல மட்டும் அனுமதிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு மாநகராட்சி மற்றும் குடிநீர் வாரிய அதிகாரிகள் வந்து சாலையில் திடீர் பள்ளம் ஏற்படுவதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்தனர். தற்போது ஏற்பட்ட மழை வெள்ளத்தால் இந்த பாதிப்பு ஏற்பட்டதா? அருகில் எதுவும் குழி உள்ளதா? என பார்வையிட்டனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறும்போது, பரபரப்பான இந்த சாலையில் திடீரென பள்ளம் ஏற்பட்டு உள்ளது. மெல்ல மெல்ல சாலை மண்ணுக்குள் செல்வதை அறிந்து தகவல தெரிவித்தோம். உடனடியாக பள்ளத்தை பார்த்ததால் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் விபத்து தவிர்க்கப்பட்டது. மழைநீர் தேக்கத்தால் மண் சரிந்து உள்வாங்கி இருக்கலாம் என்றனர்.



# புதிய அவதாரம் எடுத்த சமந்தா.. சர்ப்ரைஸால் நெகிழ்ந்த ரசிகர்கள்

பானா காத்தாடி, நான் ஈ, நீதானே என் பொன்வசந்தம், அஞ்சான், கத்தி, 24, மெர்சல் உள்ளிட்ட பல தமிழ் படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் சமந்தா. இவர் தமிழ் மட்டுமல்லாமல் இந்தி, தெலுங்கு மொழி படங்களிலும் நடித்து வருகிறார்.

சமந்தா கடந்தாண்டு மயோசிட்டிஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டு பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் இந்த நோயிலிருந்து படிப்படியாக குணமடைந்த இவர்தான்கமிட்டானதிரைப்படங்களில்தற்போதுநடித்து முடித்துள்ளார். இதைத்தொடர்ந்து தற்போது சமந்தா மயோசிட்டிஸ் நோயில் இருந்து மீண்டுவிட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நடிகை சமந்தா தயாரிப்பாளராக அவதாரம் எடுத்துள்ளார். அதாவது, இவர் 'ட்ரலாலா மூவி பிக்சர்ஸ்' என்றதயாரிப்புநிறுவனத்தைதொடங்கியுள்ளார். இது குறித்து தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள சமந்தா, "ட்ரலாலா பிக்சர்ஸ் புதிய தலைமுறை யோசனைகளைத் திரையிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அர்த்தமுள்ள, துல்லியமான மற்றும் உலகளாவிய கதைகளைச் சொல்ல இது ஒரு தளமாகும் " எனக் குறிப்பிட்டு உள்ளார்.

மேலும், தான் சிறுவயதில் கேட்ட 'பிரவுன் கேர்ள் இன் தி ரிங் நவ்' என்ற ஆங்கிலப் பாடலில் உள்ள ட்ரலாலா என்ற வார்த்தையில் இருந்து தான் இந்தப் பெயர் வந்ததாக சமந்தா விளக்கமளித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் சமந்தா, எம் டிவியின் இசை நிகழ்ச்சி ஒன்றில் நடுவராக பணியாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது பாடலை வெளியிட்ட "பைட் கிளப்"



அப்பாஸ் ஏ ரஹ்மத் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'பைட் கிளப்' (Fight Club). இந்த படத்தில் 'உறியடி' விஜய்குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், கார்த்திகேயன், சந்தானம், ஷங்கர் தாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ரீல்ஸ் குட் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்திற்கு கோவிந்த் வசந்தா இசையமைத்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் லோகேஷ் கனகராஜ் 'ஜி ஸ்குவாட்' தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் வெளியிடுகிறார். இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இதைத்தொடர்ந்து முதல் பாடலான 'யாரும் காணாத' பாடலின் வீடியோவும் வெளியானது.

இந்நிலையில்,இப்படத்தின்இரண்டாவதுபாடலான'இராவணமவன்'பாடலின்லிரிக்வீடியோவெளியாகியுள்ளது. இந்த பாடல் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.



# உடற்பயிற்சி சாதனைகளை வெளியிட்ட உலக நாயகன்

இந்தியா உட்பட உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை கொண்ட ஹாலிவுட் முன்னாள் கதாநாயகன், 76 வயதான அர்னால்ட் ஸ்வார்ஸ்னேக்கர் (Arnold Schwarzenegger).

ஆஸ்திரியா(Austria)நாட்டில்பிறந்துஅமெரிக்காவில்வாழும்அர்னால்ட்,கலிபோர்னியாமாநிலகவர்னராகவும்பணியாற்றியவர். இவரது பல திரைப்படங்கள் உலகெங்கும் வசூலை வாரி குவித்தன. இன்றும் அவரை பல ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தனது15வயதுமுதல்தொழில்முறைபாடிபில்டராகவிளங்கவிருப்பம்கொண்டஅர்னால்ட்,பலகடுமையானஉடற்பயிற்சிகளை செய்து காட்டி இளைஞர்களை ஈர்த்தவர். இன்றளவும் பல நட்சத்திர பாடிபில்டர்களுக்கு கனவு நாயகனாக திகழும் அர்னால்ட், உடற்பயிற்சி குறித்த பல ஆர்வலர்களின் சந்தேகங்களுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி வருகிறார்.

இந்நிலையில் எடை பயிற்சியில் மிக முக்கியமான 3 பயிற்சிகளாக கருதப்படும் ஸ்க்வாட் (squat), டெட் லிஃப்ட் (dead lift) மற்றும் பெஞ்ச் பிரஸ் (bench press) ஆகியவற்றில் தனது எடை சாதனைகளை குறித்து தெரிவித்தார்.

"பெஞ்ச் பிரஸ் பயிற்சியில் எனது அதிகபட்ச எடை 238 கிலோகிராம். எனது சிறப்பான டெட் வெய்ட் 322 கிலோகிராம்களை எட்டியது. எனது அதிகபட்ச ஸ்க்வாட் எடை 276 கிலோகிராம்கள். என்னுடைய காலகட்டத்தில் இவை ஒரு சாதனையாக பார்க்கப்பட்டது. ஆனால், தற்போதைய காலகட்டத்தில் இவை வழக்கமாக உலகம் முழுவதும் பலரால் பயிற்சி செய்யக்கூடிய எடையாக மாறி விட்டது. அது ஒரு காலம். ஆனாலும், தினசரி ஜிம்முக்கு செல்வதை நான் நிறுத்தியதில்லை; அதில் எந்த சமரசமும் செய்து கொண்டதில்லை. ஓய்வு எடுக்க தொடங்கினால், துரு பிடித்து விடுவோம்" என ஏழு முறை மிஸ்டர் ஒலிம்பியா (Mr. Olympia) போட்டிகளை வென்றவரான அர்னால்ட் கூறினார். தவறாத கட்டுப்பாட்டின் காரணமாக அர்னால்ட் மேற்கொண்ட ஒழுங்குமுறையான உடற்பயிற்சிகளால் கட்டுக்கோப்பான உடலமைப்பை கொண்டுள்ளதால் இன்றளவும் பாடிபில்டர்களின் முன்மாதிரியாக விளங்கி வருகிறார்.

# கதாநாயகர்களை உயர்த்தி பிடித்தால் கதாநாயகிகள் எப்படி வளர முடியும்? ஜோதிகா பேச்சு



நட்சத்திரதம்பதிகளான சூர்யாஜோதிகாவுக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். இந்நிலையில் பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வரும் ஜோதிகா, சமீபத்தில் வெளியான காதல்தி கோர் படத்தில் மம்முட்டிக்கு மனைவியாக நடித்திருந்தார். படம் மிகுந்த வரவேற்பை பெற்ற நிலையில் நேர்காணல் ஒன்றில் ஜோதிகா கூறியதாவது:

சினிமாவில் பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரங்கள் அமைவதற்காக அதிகமாக உழைக்கிறேன். கதாநாயகிகள் 10 சதவீதம் அதிகமாக உழைக்க வேண்டியுள்ளது. பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கதைகளை ரசிகர்கள் விரும்ப வேண்டும். பெரிய கதாநாயகர்களை மட்டும் உயர்த்தி பிடித்தால் கதாநாயகிகள் எப்படி வளர முடியும்?

புது இயக்குனர்கள் மட்டுமே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து படம் எடுக்கின்றனர். பெரிய இயக்குனர்கள் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கதாநாயகர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இந்தி, மலையாள மொழிகளில் பெண்களை மையப்படுத்தி படங்கள் இயக்கப்படுகின்றன. தமிழில் அப்படி இல்லாதது வருத்தம். திருமணத்திற்கு பிறகு நான் தமிழ் பேச பழகிவிட்டேன்.

குழந்தைகளுக்கு நாங்கள் திட்டமிட்டதால் நடிப்பதற்கு சில காலம் இடைவெளி கொடுத்தேன். சினிமாவை தாண்டியும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. குழந்தைகளா? சினிமாவா? என்றால் குழந்தைகளுக்குதான் முக்கியத்துவம் கொடுப்பேன். ரசிகர்களுக்கு என் மேல் பாசம் இருந்தால் தமிழ்நாடு மருமகள் என்பார்கள்.

கோபம் வந்தால் இந்திக்காரி என்பார்கள். சமூக வலைதளத்தில் என்னை குஷி ஜோதிகா என்றும் குயின் எனவும் சிலர் கிழவி என்றும் கூறுவார்கள். இதை பற்றி நான் கவலைப்படமாட்டேன். எப்போதும் ஒரே கதாபாத்திரமில்லாமல் வில்லி கதாபாத்திரம் வந்தாலும் நடிப்பேன் என்று கூறினார்.

# ரோகித் சர்மா யோ–யோ டெஸ்டில் பாஸ் ஆனாரா? இந்திய பயிற்சியாளர் சொன்ன பதில்



இந்தியாவில் கிரிக்கெட் என்ற விளையாட்டு அறிமுகமான காலத்தில் இந்திய அணியில் இடம்பிடிக்க உடற்தகுதி அவசியமில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், இன்று நிலைமை முற்றிலும் வேறாக மாறிவிட்டது. கிரிக்கெட்டில் உடற்தகுதி மிகவும் அவசியம் என்ற காலம் இது. இதற்கு உச்சக்கட்ட உதாரணமாக இந்திய வீரர் விராட் கோலி இருக்கிறார்.

இவர் தலைமையிலான இந்திய அணியில் இடம்பிடிக்க வீரர்கள் யோயோ ஃபிட்னஸ் டெஸ்ட் எனும் சோதனையில் தேர்ச்சி பெற வேண்டிய அவசியம் இருந்தது. எனினும், இந்திய கேப்டன் ரோகித் சர்மா ஃபிட்னஸ் குறித்த கேள்வி நீண்ட காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. ரோகித் சர்மா எத்தனை போட்டிகளில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியும், இது தொடர்பான சர்ச்சை தொடர்ந்து நீடிக்கிறது.

இந்த நிலையில், ரோகித் சர்மா யோ யோ ஃபிட்னஸ் டெஸ்ட்இல் தேர்ச்சி பெற்று இருக்கிறாரா என்ற கேள்விக்கு இந்திய அணியின் பயிற்சியாளர் குழுவில் இடம்பெற்றுள்ள அன்கிட் கலியர் பதில் அளித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், "ரோகித் சர்மா ஃபிட்ஆன வீரர். அவரது ஃபிட்னஸ் சிறப்பாக உள்ளது. அவர் உடல் தோற்றம் பருமன் அதிகமாக இருப்பதை போன்று காட்சியளிக்கலாம், ஆனாலும், அவர் யோ யோ டெஸ்டில் எப்போதுமே தேர்ச்சி பெற்றிடுவார். விராட் கோலி போன்றே அவரும் நல்ல உடல்நிலையில் உள்ளார்." "அவர் சற்று பருமன் கொண்டவர் போன்று காட்சியளித்தாலும், களத்தில் அவரின் செயல்பாட்டை நாம் பார்த்திருக்கிறோம். கட்டுக்கோப்பான உடற்தகுதி கொண்ட கிரிக்கெட் வீரர்களில் அவர் நிச்சயம் இடம்பிடித்துள்ளார்," என்று தெரிவித்தார்.

# தற்போதைய இந்திய அணி சிறந்தது தான்: என்றாலும்... காலிஸ் கணிப்பு



இந்திய கிரிக்கெட் அணி தென்ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. தற்போது டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. அதன்பின் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

அதன்பின் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற இருக்கிறது. முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் டிசம்பர் 26ந்தேதியும், 2வது டெஸ்ட் கேப் டவுனில் ஜனவரி 3ந்தேதியும் தொடங்க இருக்கிறது.

விராட் கோலி குறித்து தென்ஆப்பிரிக்கா அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் காலிஸ் கூறியதாவது:

விராட் கோலி தென்ஆப்பிரிக்காவில் மிகப்பெரிய தொடரை விளையாட விரும்புவார் என நம்புகிறேன். அவர் சிறந்த ஃபார்மில் உள்ளார். இந்தியாவின் வெற்றிக்கு அவர் முக்கிய பங்கு வகிப்பார். இந்திய அணி தென்ஆப்பிரிக்காவில் தொடரை வெல்ல வேண்டும் என்றால், விராட் கோலி சிறந்த தொடராக அமைய வேண்டும். விராட் கோலி சிறந்த வீரர். தென்ஆப்பிரிக்காவில் குறிப்பிட்ட அளவு ரன்கள் சேர்த்துள்ளார்.




அவர் மற்ற வீரர்களுக்கு ஆட்டத்தின் நுணுக்கங்களை சொல்லிக் கொடுக்கும் நபர். தென்ஆப்பிரிக்கா சீதோஷண நிலையை மற்றும் எதிர்பார்ப்பது என்ன என்பது குறித்து இளம் வீரர்களுக்கு யோசனை வழங்கக் கூடியவர்.

தற்போதுள்ள இந்திய அணி சிறந்தது. என்றபோதிலும் தென்ஆப்பிரிக்கா மண்ணில் தென்ஆப்பிரிக்காவை வீழ்த்துவது கடினம்.

செஞ்சூரியன் தென்ஆப்பிரிக்கா அணிக்கு சாதகமாக இருக்கும். கேப்டவுன் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும். இது சிறந்த தொடராக இருக்கும். ஒன்று அல்லது இரண்டு செசன்களில் சிறப்பாக விளையாடும் அணி ஒன்றைவிட ஒன்று சிறந்ததாக திகழும்" என்றார்.

கடந்த ஐசிசி டெஸ்ட் உலக சாம்பியன்ஷிப் தொடரில் விராட் கோலி 30 இன்னிங்சில் 932 ரன்கள் எடுத்துள்ளார். தற்போதைய தொடரில் ஒரு சதம், இரண்டு அரைசதங்கள் அடித்துள்ளார். நடைபெற்று முடிந்த உலகக் கோப்பையில் 765 ரன்கள் குவித்து தொடர் நாயகன் விருதை வென்றார்.

# தடகள போட்டியில் அசத்திய 95 வயது முதியவர்



ஆந்திர மாநிலம், திருப்பதி அடுத்த எஸ்.வி தாரகராம மைதானத்தில் மாநில அளவிலான 42வது தடகள சாம்பியன்ஷிப் போட்டி நேற்று நடந்தது.

குண்டூர் மாவட்டம், தெனாலியை சேர்ந்த நாராயணமூர்த்தி (வயது 95). இவர் உடற்கல்வி ஆசிரியராக வேலை செய்து ஓய்வு பெற்றவர்.

கடந்த 30 ஆண்டுகளாக மாநிலத்தில் நடைபெறும் பொதுநிலை தடகள போட்டி எங்கு நடந்தாலும் அதில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

நேற்று நடந்த தடகள போட்டியில் நாராயணமூர்த்தி கலந்து கொண்டு வட்டு எறிதல் ஈட்டி எறிதல் குண்டு எறிதல் உள்ளிட்டவைகளில் கலந்துகொண்டு அசத்தி காட்டினார்.

வருகின்ற 2024ம் ஆண்டு புனேவில் நடைபெற உள்ள தேசிய மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார். சைவ உணவும், உடற்பயிற்சியும் தனது உடல் ஆரோக்கியத்தின் ரகசியம் என நாராயணமூர்த்தி தெரிவித்தார். இவருக்கு 60 வயதிற்கு மேற்பட்ட 3 மகன்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் கிராண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி தேதி அறிவிப்பு



சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன்ஷிப் 2023 போட்டி இம்மாதம் 15 21ம் தேதி வரை சென்னை லீலா பேலஸில் நடைபெறவுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

மேலும், இப்போட்டியில் 8 சர்வதேச மற்றும் இந்திய கிராண்ட் மாஸ்டர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இப்போட்டியின் மொத்த பரிசுத் தொகையாக ரூ.50 லட்சம் வழங்கப்படவுள்ளது.



பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

**விளக்கம்:**
இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.